# 29-12-2024 செய்தி

## ‘புதுமைப்பெண்’ விரிவாக்கத் திட்டம்

**தூத்துக்குடியில் நாளை தொடங்கி வைக்கிறர் முதல்வர்**

- அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து உயர் கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கும் ரூ.1,000 வழங்கும் ‘புதுமைப்பெண்’ விரிவாக்கத் திட்டத்தை தூத்துக்குடியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் டிச.30-இல் தொடங்கி வைக்கவுள்ளார்.

- மேலும் தூத்துக்குடியில் மினி டைடல் பூங்காவை முதல்வர் ஞாயிற்றுக்கிழமை (டிச.29) தொடங்கி வைக்கவுள்ளார்.

- இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு : முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்றது முதல் மகளிர் முன்னேற்றத்துக்குப் பல்வேறு புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

- அந்த வகையில் புதுமைப் பெண் திட்டம் 2022 செப்.5-இல் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேரும் மாணவியருக்கு மாதம் ரூ.1,000 வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. இதுவரை 4.25 லட்சம் மாணவிகள் பயன்பெற்றுள்ளனர்.

- இந்தத் திட்டம் தற்போது அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவியர்க்கும் மாதம் 1,000 வழங்கும் வகையில் விரிவுபடுத்தப்படுகிறது.

- தூத்துக்குடியில் டிச.30 காலை 10 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் புதுமைப்பெண் விரிவாக்கத் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைக்கிறார். இதன் பயனாக, தமிழகம் அரசின் உதவி பெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை படித்து உயர்கல்வியில் சேர்ந்துள்ள 75,028 மாணவியர் மாதம் ரூ.1,000 பெற்றுப் பயனடைவர்.

**மினி டைடல் பூங்கா**

- தூத்துக்குடியில் 63,000 சதுர அடி பரப்பில் தரைத்தளம் மற்றும் 4 தளங்களுடன் மினி டைடல் பூங்கா கட்டப்பட்டுள்ளது. இதனை முதல்வர் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.50 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.

- ரூ.32.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள இந்த மினி டைடல் பூங்கா, வாகனம் நிறுத்துமிடம், பல்வகை உணவுக்கூடம், உடற்பயிற்சிக்கூடம், கலையரங்கம், தடையற்ற மின்வசதி ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடியதாக அமைந்துள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

SURESH'